# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 147/நகராட்சி/2018**

**நாள் : 10/10/2018**

**திருமதி ஜுலைகா பீ,**
**இராணிப்பேட்டை.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**ஆற்காடு நகராட்சி, ஆற்காடு.** – **எதிர் மனுதாரர்**

வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை, ரயில்வே ஸ்டேஷன் சாலை, 3–வது கிராஸ், கதவு எண். 7 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி ஜுலைகாபீ அவர்களின் 26.06.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.06.2018 அன்று பெறப்பட்டு 147/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் மற்றும் ஆற்காடு நகராட்சி ஆணையர் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## <u>ஆணை</u>

வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை, ரயில்வே ஸ்டேஷன் சாலை, 3–வது கிராஸ், கதவு எண். 7 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி ஜுலைகாபீ என்பவர், காலம் சென்ற தனது தாயார் திருமதி சுல்தான் பீவிக்கு சொந்தமான வீடு ஆற்காடு நகரில் உள்ளதென்றும், அவ்வீட்டினை அவரது வாரிசுதாரர்கள் ஆறு நபர்களும் சமபங்காக எடுத்துக்கொள்ளும்படி பத்திரம் ஒன்றை எழுதி வைத்துள்ளார் என்றும், இந்நிலையில் மேற்படி வீட்டிற்கான சொத்துவரி விதிப்பு தன் தாயார் பெயரில் இருந்ததை மற்ற வாரிசுதாரர்களின் ஒப்புதலின்றி தனது இளைய சகோதரர் திரு முகமது இஸ்மாயில் என்பவர் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் அவ்வாறு பெயர் மாற்றம் செய்யக் காரணமான ஆவண விவரங்களை வழங்கவும் சொத்துவரிப் பெயர் மாற்றத்தினை இரத்து செய்யவும் ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. ஆற்காடு நகராட்சி, வார்டு எண்.11, ஷர்புதீன் தெரு, 7/12 கதவு எண்ணுள்ள வீட்டிற்கு திருமதி சுல்தான் பீவி என்பவர் பெயரில், வரி விதிப்பு எண்.5055–இல் சொத்துவரி வசூலிக்கப்பட்டு வந்ததென்றும், அவரது மறைவுக்குப் பின் அன்னாரின் வாரிசுதாரர்களில் ஒருவரும் மகனுமான திரு உ. முகமது இஸ்மாயில் என்பவர் 12.06.2017–இல் தாக்கல் செய்த விண்ணப்பம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட சொத்துவரி விதிப்பு 07.07.2017 நாளிட்ட செயல்முறையில் திரு உ. முகமது இஸ்மாயில் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது என நகராட்சி ஆணையர் தனது 20.07.2018 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனினும், முறையீட்டு மனுதாரர் திருமதி ஜுலைகாபீ ஆட்சேபனை மனு தாக்கல் செய்ததின் பேரில், திரு உ. முகமது இஸ்மாயில் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்ட சொத்துவரி பெயர் மாற்றம் 20.07.2018 நாளிட்ட தனது செயல்முறை எண்.729/அ1/2018–இல் இரத்து செய்து ஆணையிடப்பட்டுள்ளதென்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3.முறையீட்டு மனுதாரரின் கணவர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோரிடம் 01.10.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்படி வீட்டிற்கான **சொத்துவரி** பெயர் மாற்றத்தினை தனது மனைவியின் தாயார் திருமதி சுல்தான் பீவி பெயர் மற்றும் அனைத்து வாரிசுதாரர்கள் அனைவர் பெயரிலும் மாற்றம் செய்து தர வேண்டும் என விசாரணையின்போது முறையீட்டு மனுதாரரின் கணவர் திரு கே.எ. ஜலாலுதீன் கேட்டுக்கொண்டார். காலம் சென்ற திருமதி சுல்தான் பீவி அவர்களுக்கு ஆறு நபர்கள் வாரிசுதாரர்களாக உள்ள நிலையில், ஒருவர் பெயரில் மட்டும் சொத்துவரி விதிப்பு மாற்றம் செய்தது சரியல்ல என்றும் அதை கூடிய விரைவில் சரி செய்து விடுவதாகவும் நகராட்சி ஆணையர் விசாரணையின்போது தெரிவித்தார்.

4. இந்நேர்வு சம்பந்தப்பட்ட வீட்டின் உரிமையாளர் திருமதி சுல்தான் பீவி 30.05.2010 அன்றே காலமாகிவிட்டார். காலமான திருமதி சுல்தான் பீவிக்கு ஆறு நபர்கள் (நான்கு ஆண்கள் + இரண்டு பெண்கள்) வாரிசுதாரர்கள் என 25.03.2014 நாளிட்ட ஆற்காடு வட்டாட்சியர் வழங்கிய சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் திருமதி சுல்தான் பீவி காலமாகி 7 ஆண்டுகளுக்குப் பின், அவரது வாரிசுதாரர்களில் இளையவரான திரு முகமது இஸ்மாயில் என்பவரின் பெயருக்கு மட்டும் 5055– எண்ணிட்ட சொத்துவரி விதிப்பினை பெயர் மாற்றம் செய்தது முறையாகாது. மேலும், மேற்குறிப்பிட்ட சொத்துவரி பெயர் மாற்றம் செய்வதற்கு மற்ற வாரிசுதாரர்களின் ஒப்புதலையும் பெற நகராட்சி அலுவலர்கள் தவறியுள்ளனர். இவ்வாறு சொத்து வரி பெயர் மாற்றம் செய்ததை இரத்து செய்ய மனுதாரர் முறையிட்டும் நகராட்சி ஆணையர் எந்தவித நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்த பின்பே திரு உ. முகமது இஸ்மாயில் பெயரில் மாற்றம் செய்யப்பட்ட சொத்து வரி பெயர் மாற்றம் இரத்து செய்யப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் இதுபோன்ற நேர்வுகளில் உரிய ஆவணங்களின் அடிப்படையிலேயே சம்பந்தப்பட்ட வாரிசுதாரர்களின் ஒப்புதலைப் பெற்று சொத்துவரி பெயர் மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஆற்காடு நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், இந்நேர்வில் திருமதி சுல்தான் பீவி பெயரில் உள்ள 5055 எண்ணிட்ட சொத்துவரி விதிப்பினை அன்னாரது வாரிசுதாரர்கள் பெயரில் விதிகளுக்குட்பட்டு மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்வதுடன் அச்சொத்துவரி விதிப்பின் நிலுவைத் தொகை ஏதேனுமிருப்பின் பெயர் மாற்றம் செய்யப்படவுள்ள வாரிசுதாரர்களிடமிருந்து வசூலிக்கவும் ஆணையிடப்படுகிறது.

**2018**–ஆம் ஆண்டு, **அக்டோபர்** திங்கள், **10**–ஆம்நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

22/10/2018

செயலாளர்.

22.10.18

22/10/18

பெறுநர்

1. திருமதி ஜுலைகா பீ,
   7, ரயில்வே ஸ்டேஷன் ரோடு, 3–வது கிராஸ்,
   இராணிப்பேட்டை – 632 401,
   வேலூர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   ஆற்காடு நகராட்சி,ஆற்காடு,
   வேலூர் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி